[1978 ஏப்ரல் 7

அந்தச் சங்கத்தில் அது உறுப்பினராக இருப்பதால் தொழிலாளர்களுக்கு எந்த வகையிலும் குந்தகம் ஏற்படாத வண்ணம் கண்டிப்பாகப் பார்த்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடானா நதியின் குறுக்கே பாலம்.

*வினா 841— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள பிரதேசத்திலிருந்து அடச்சாணிக்கு செல்லும் பாதையில் உள்ள கடானா நதியின் மீது பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப் படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கோட்டப்பட்டி—தும்பல் சாலை

* வினா 842— திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டம், கோட்டப்பட்டியில் இருந்து தும்பல் செல்லும் வனத்துறை நெடுஞ்சாலையை பஸ் போக்குவரத்துக்கு ஏற்றவாறு செப்பனிடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

[முற்பகல் 9-50]

திரு. எம். அண்ணாமலை : கோட்டப்பட்டியிலிருந்து தும்பல் செல்லும் வனத்துறை நெடுஞ்சாலை சரியான முறையில் இல்லாத காரணத்தால்—நாற்பதுக்கு மேற்பட்ட கிராமங்கள், மலைப்பகுதிகள் உள்ளன—ரோடு வசதி சரியாக இல்லாததால் சிறிதளவு கூட முன்னேற்றம் இல்லை. ஆகவே அந்த நெடுஞ்சாலையை ஹைவேசில் எடுத்து பஸ் போக்குவரத்து வசதி செய்து தர அரசு முன்வருமா?

1978 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சித்திலிங்கி—தர்மபுரி மாவட்ட எல்லை வரையுள்ள 16 கி. மீ. நீளமுடைய சாலை ஒரு வண்டிப் பாதையாகும். அதைச் செப்பனிட்டுச் சாலைப் போக்கு வரத்துக்கு ஏற்புடையதாக ஆக்க 18 லட்சம் ரூபாய் ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. நிதிநிலைத் தட்டுப்பாடு காரணமாகத் தற்போது ஏற்றுக்கொள்வதற்கில்லை. வரும் திட்ட ஆண்டில் அது பரிசீலிக்கப்படும்.

இன விருத்திக் காளைகள் இறக்குமதி.

* வினு 843— திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்பாண்டில் நமது மாநிலத்திற்கு வெளிநாட்டில் இருந்து இன விருத்தி செய்ய காளைகள் ஏதேனும் வரவழைக்கப் பட்டனவா?

(ஆ) ஆம் எனில், அதற்கு விமான கட்டணமாகச் செலுத் தப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:

(அ) ஆம். நடப்பாண்டில் நமது மாநிலத்தில் தஞ்சை மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டை உயரின கால்நடை வளர்ப்புப் பண்ணைக்கு, ஆஸ்திரேலியாவிலிருந்து இரண்டு ஜெர்சி உயரின பொலி காளைகள் வரவழைக்கப்பட்டன.

(ஆ) அதற்கு விமானக் கட்டணம் ஏதும் இந்த அரசினுல் செலுத்தப்படவில்லை.

திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்: வெளிநாடுகளிலிருந்து எவ்வளவு காளைகள் வரவழைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது? அதில் எவ்வளவு காளைகள் வந்திருக்கின்றன? இன்னும் எவ்வளவு காளைகள் வரவேண்டும்?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி: வெளி நாட்டிலிருந்து 240 ஜெர்சி இன கிடேரிகளும் 10 ஜெர்சி இன இளங்காளைகளும் வரவேண்டும். தற்போது 50 ஜெர்சி கிடேரிகளும் 2 ஜெர்சி இளங்காளைகளும் வந்திருக்கின்றன. மிச்சம் 198 கால்நடைகளைச் சீக்கிரம் அனுப்பி வைக்கவேண்டுமென்று மத்திய அரசை தமிழக அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. பதில் எதிர்பார்க்கப்படுகிறது.